தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுச்சேரியில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை (செப்.5) ஆங்காங்கே மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்குப் பருவமழை கேரளம், கடலோர கர்நாடகத்தில் தீவிரம் அடைந்து வருகிறது. இதன் தாக்கமாக, கடந்த சில நாள்களாக தமிழகம் முழுவதும் மிதமான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வியாழக்கிழமை (செப்.4) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், சென்னை நுங்கம்பாக்கத்தில் 26.9 மி.மீ, மீனம்பாக்கத்தில் 59.2 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே போல் திருவள்ளூர் மாவட்டம் செம்பரம் பாக்கம், தாமரைப்பாக்கத்தில் தலா 70 மி.மீ, சென்னை விமான நிலையத்தில் 60 மி.மீ, புதுக்கோட்டை இலுப்பூர், திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியில் தலா 50 மி.மீ, ஆலங்குடி, ஸ்ரீபெரும்புதூரில் தலா 40 மி.மீ, வேலூர், வல்லம், சோழவரம், கொளப்பாக்கம், சோளிங்கர், வால்பாறை, புழல், எண்ணூரில் தலா 30 மி.மீட்டர் மழை பதிவாகியதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னறிவிப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மிதமான மழை பெய்யும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சுற்றுச்சூழலைப் பாதிக்காமல் நெல் நாற்றங்கால் பராமரிப்பு



சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் நெல் நாற்றங்காலை பராமரிப்பது எப்படி? என்பது குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் மையம் யோசனை தெரிவித்துள்ளது. தற்போது புதுவை, தமிழகப் பகுதிகளில் சம்பா பருவத்துக்கான நெல் விதைகளை நாற்றங்காலில் விதைக்கும் பணியை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். பொதுவாக சம்பா பருவமானது அதிக நாள்களைக் கொண்டுள்ளதால் நீண்டகால நெல் ரகங்களான வெள்ளைப் பொன்னி, பொன்மணி (சிஆர்.1009) அல்லது சாவித்திரி, பாபட்டலா, ஐ.ஆர்.20, பின் சம்பா ரகமான ஆடுதுறை 39 போன்ற ரகங்களை விவசாயிகள் தேர்வு செய்து சாகுபடி செய்ய உள்ளனர். நெல் நாற்றங்காலில் தோன்றக் கூடிய பூச்சி, நோய்களை கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக்கொல்லிகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு ரசாயன பூச்சிக்கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்துவதால் பூச்சிகளுக்கு பூச்சிக்கொல்லிகளால் எதிர்ப்புத் தன்மை உருவாதல், திடீர் இனப்பெருக்கம், மறு உற்பத்தி, நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து போதல், தானியங்களில் பூச்சிக்கொல்லிகளின் வீழ்படிவு தங்குதல், சுற்றுச்சூழல் சீர்கேடு, மனித இனம், கால்நடை, வனவிலங்குகள், நன்மைப் பயக்கும் பூச்சி இனங்களில் நச்சுத்தன்மை ஊடுருவல் போன்ற பின் விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. எனவே பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்த மாற்று வழிமுறைகளை, ஒருங்கிணைந்த முறையில் கடைப்பிடித்து மேலாண்மை செய்வது சிறந்ததாகும்.

**நாற்றங்கால் அமைக்கும் முறை**: நாற்றங்கால் படுக்கைகளை மேடான இடத்தில் அமைக்க வேண்டும். விளக்குக் கம்பங்களுக்கு அருகாமையில் நாற்றங்கால் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒரு சதுர மீட்டர் நாற்றங்கால் பரப்பளவில்

உள்ள படுக்கைகளை 50 கிராம் பாக்டீரியா உயிர்ரக கொல்லியான சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ், 200 கிராம் வேப்பம் புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கு ஆகியவற்றுடன் கலந்து பின் நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

**விதை நேர்த்தி**: நாற்றங்காலில் விதை விதைப்பதற்கு முன்பாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனால் விதை மூலம் பரவக் கூடிய நோய்க்கிருமிகளை பரவாமல் கட்டுக்குள் வைக்க முடியும். உலர்விதை நேர்த்தி, ஈர விதை நேர்த்தி என இரண்டு வகையில் விதை நேர்த்தி செய்யலாம்.

**உலர்விதை நேர்த்தி முறை**: ஒரு ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகளை, ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் உயிரக பாக்டீரியம் மருந்தை விதைக் கலக்கும் கருவியில் போட்டு கருவியின் மூடியை மூடி முன்பக்கம் 10 தடவை, பின்பக்கம் 10 தடவை என 20 தடவைகள் சுற்றுவதால் விதைகள் விஞ்ஞான ரீதியில் நேர்த்தி அடைகின்றன. விதைக் கலக்கும் கருவி வேளாண் துறை அலுவலகங்களிலும் உழவர் உதவி மையங்களிலும் வாடகைக்கு கிடைக்கும். விதைக் கலக்கும் கருவி கிடைக்காத வேளையில் ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் விதைகளை கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பெரிய கோணிப் பையில் நிரப்பி ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் சூடோமோனா பாஸ் ஃபுளோரசன்ஸ் உயிர்ரக பாக்டீரியம் மருந்தை கோணிப்பையில் போட்டு, இரண்டு புறமும் இரண்டு ஆள்களைக் கொண்டு மேலும் கீழும் 20 தடவைகள் குலுக்குவதால் விதைகள் விஞ்ஞான ரீதியில் நேர்த்தி அடைகின்றன.

**ஈர விதை நேர்த்தி முறை**: ஒரு ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகளை சிறிய, சிறிய கோணிப்பைகளில் சிப்பங்களாக நிரப்பி ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் சூடோமோனாபாஸ் ஃபுரோளரசன்ஸ் உயிர்ரக பாக்டீரியம் மருந்தை கோணிப்பையில் போட்டு சிப்பங்களை வயல் நீர்த் தொட்டிகளில் போட்டு நீரில் நனைய வைக்கும்போது விஞ்ஞான ரீதியில் விதைகள் நேர்த்தி அடைகின்றன. அதன் பின் விதைகளை முளைக்கச் செய்து பயன்படுத்த வேண்டும்.

**பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்துதல்**: விதைத்த 10 நாள்களுக்குள் நாற்றின் முளைப் பகுதி கருகி, இலையானது சிறிது சிறிதாக மஞ்சள் நிறமாக தோன்றினால் அது இலைப்பேன் என்ற பூச்சியின் தாக்குதல் அறிகுறியாகும். இதை ஊர்ஜிதப் படுத்த உள்ளங்கையை நாற்றங்கால் நீரில் நனைத்து நாற்றின் மீது தடவி உள்ளங்கையை திருப்பி பார்த்தால் கறுப்பு நிறத்தில் சிறிய பேன்கள் ஓடிக் கொண்டிருக்கும். இதைக் கட்டுப்படுத்த ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு லிட்டர் தண்ணீரை எடுத்து அதை விசைத் தெளிப்பான் கொண்டு நாற்றங்கால் இலையின்

முனைப் பகுதியில் படும்படி பீய்ச்சி அடித்தால் இலைப்பேன்கள் கீழே கொட்டிக் கொள்ளும். பின்பு நாற்றங்காலில் உள்ள நீரை வடிக்கட்டுவதன் மூலம் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். விசைத் தெளிப்பான் வைத்திராத விவசாயிகள் நாற்றங்காலை நீரில் 10 நிமிடங்கள் முழுதும் நனையுமாறு மூழ்கடித்து பின் நீரினை வடிகட்டுவதால் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். பின்னர் ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 10 மில்லி 3 சதவீத வேப்ப எண்ணெய்யை 10 கிராம் ஒட்டுத் திரவத்துடன் சேர்த்து நாற்றங்கால் இலைப்பரப்பில் தெளிப்பதால் இலைப்பேன்கள் கசப்புத் தன்மை காரணமாக ஓடிவிடும். அல்லது குமட்டல் ஏற்பட்டு வாந்தி எடுத்து இறந்து விடும். விதைத்த 10-ல் இருந்து 15 நாள்களுக்குள் தோன்றக் கூடிய குட்டை கொம்பு வெட்டுக்கிளியைக் கட்டுப்படுத்த மேற்கண்ட வேப்ப எண்ணெய்யே போதுமானதாகும். மேலும் நாற்றங்காலில் 10 "டி' வடிவ குச்சிகள் வைப்பதால் பறவைகள், குருவிகள், மைனா, கோட்டான் போன்றவை அதன் மீது அமர்ந்து குட்டைக் கொம்பு வெட்டுக்கிளி களையும், இலை உண்ணும் புழுக்களையும் பறக்கும் தாய்ப்பூச்சிகளையும் பிடித்து உண்டு அழிக்கும். நாற்றங்காலில் தோன்றக் கூடிய இலை சுருட்டுப்புழுவின் தாக்குதலைக் குறைக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் பெவேரியா பேசியான் என்ற உயிர்ரக பூச்சிக்கொல்லியை அதிகாலைப் பொழுதில் கைத்தெளிப்பான் மூலம் 200 லிட்டர் நீரைப் பயன்படுத்தி தெளிப்பதால் புழுக்களின் மீது நோய் உருவாகி அழிக்கலாம். நாற்றங்கால் வயது 15 முதல் 20 நாள்கள் உள்ள தருணத்தில் நாற்றுக்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறினால் அது பச்சை தத்துப்பூச்சி தாக்குதல் அறிகுறியாகும். இதை நிவர்த்தி செய்ய 5 சீத்தாப்பழங்களில் உள்ள கொட்டைகளை லேசாக இடித்து 1 லிட்டர் தண்ணீரில் ஒரு இரவு முழுவதும் 12 மணிநேரம் வைத்திருந்து அந்த சாற்றை மறுநாள் காலையில் மெல்லிய துணியில் வடிகட்டி நாற்றங்காலில் தெளிக்க வேண்டும். தட்பவெப்ப நிலை காரணமாக நிலவும் ஒடுக்கத்துடன் கூடிய அதிகமான வெப்பநிலையால் செஞ்சிலந்திகளின் தாக்குதல், நெல் நாற்றுக்களில் தோன்றி இலைகள் மீது சிகப்பு வண்ணத் திட்டுகள் ஏற்படும். இதைக் கட்டுப்படுத்த ஒரு சதவீத புதங்கம் எண்ணெய் (1 மில்லிக்கு ஒரு லிட்டர் நீர்) அல்லது டைக்கோபால் (1.5 மில்லிக்கு ஒரு லிட்டர் நீர்) அல்லது நனையும் கந்தகம் (8 சென்ட் நாற்றங்காலுக்கு 1 கிலோ) தெளிக்க வேண்டும். நாற்றங்கால் வரப்புகளை புல், பூண்டு, களைகள் இல்லாத வாறு நன்கு செதுக்கி சுத்தமாக வைத்திருப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நாற்றங்காலை தாக்காதவாறு பாதுகாக்கலாம் என வேளாண் அறிவியல் மையம்

தெரிவித்துள்ளது.

**<u>பரிசோதனைக்காக மண் சேகரிப்பது எப்படி?</u>**



உரிய பருவத்தில் அதற்குரிய பயிரை விதைத்து விவசாயிகள் அதிக அளவில் பயன்பெற, மண் பரிசோதனை என்பது மிகவும் அவசியமான ஒன்று. இந்த ஆய்வுக்காக, மண் சேகரிக்கும் முறை குறித்து மாவட்ட வேளாண் துறை அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விவசாயிகள், தங்களது அனுபவத்தால் பருவத்துக்கேற்ற பயிர்களை பயிர்செய்து லாபமடைந்து வந்தனர். ஆனால், நாளடைவில் ரசாயன உரங்களால் மண்ணின் தன்மை விஷமாக மாறியுள்ளது. இதனால் போதிய அளவு விளைச்சலும் இல்லாமல், விளைவிக்கும் பொருள்களில் போதிய லாபமும் இல்லாமல் விவசாயிகள் நலிவடைந்து வருகின்றனர். தங்கள் நிலங்களின் மணலை ஆய்வுக்கு உள்படுத்தி, எந்தப் பயிரை பயிரிடலாம், எந்த வகையான உரம் இட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். இதற்கு மண் பரிசோதனை மிகவும் அவசியமாகிறது.

**மண் சேகரிப்பு வரைமுறை:**

ஆய்வுக்காக மண்ணை சேகரிப்பதில் சில வரைமுறைகள் உள்ளன. பயிர் அறுவடை செய்த பின்பும், அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரே நிலத்தில் மண் வெவ்வேறாக இருந்தால் அந்த பகுதிகளில் தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். மேட்டுப் பகுதி, தாழ்வான பகுதியில் தனித்தனியாக மண் சேகரிக்க வேண்டும். வரப்பு வாய்க்கால் அருகிலும், எடுக்குழி அருகிலும், மர நிழலில் உள்ள இடங்களிலும் மண் மாதிரி எடுத்தல் கூடாது. மண் மாதிரி எடுக்கும் இடத்தில் உள்ள இலை, சருகு, புல்

ஆகியவற்றை அதன் மேல் உள்ள மண்ணை ஒதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். பயிருக்கு ஏற்றவாறு மண் மாதிரி எடுக்கும் ஆழம் வேறுபடும். நெல், சோளம், கம்பு, கடலைப் பயிர் ஆகியவற்றுக்கு அரை அடி ஆழமும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகளுக்கு முக்கால் அடி ஆழமும், தென்னைக்கு 3 அடி ஆழமும் (ஒரு அடி ஆழத்துக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கலாம்) பழ மரங்களுக்கு 4 முதல் 5 அடி ஆழம் வரை மண் சேகரிக்க வேண்டும். மண் சேகரிக்க வெட்டப்படும் குழியை ஆங்கில எழுத்தான "வி' வடிவில் அமைக்க வேண்டும். குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ்வரை மண்ணை சுரண்டி சேகரிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் மண்ணை சேகரித்து சுத்தமான பிளாஸ்டிக் அல்லது கோணியின் மீது கொட்டி அதை நான்கு சம பாகமாக கலந்து, அரை கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டுக் கட்ட வேண்டும். மண் ஈரமாக இருந்தால், நிழலில் உலர்த்தி நான்கு சமபாகமாக பிரித்து மாதிரி எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயியின் பெயர், கிராமம், வீட்டு முகவரி, நிலத்தின் பெயர், அடுத்து பயிரிடப் போகும் பயிர், பாசனப் வசதி, இதற்கு முன் பயிரிடப்பட்ட பயிர் குறித்த விவரம் உள்ளிட்ட விவரங்களை மண் ஆய்வுக் கூடத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதுபோன்ற முறையில் மண் மாதிரியை சேகரித்து ஆய்வுக்கூடத்தில் கொடுத்து விவசாயிகள் பயன்பெறலாம் என மாவட்ட வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>"பாரம்பரிய உணவு மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு வழிவகுக்க வேண்டும்'</u>**

பாரம்பரிய உணவு மற்றும் மரபணு மேம்படுத்தப்பட்ட கால்நடைகளில் இருந்து பெறப்படும் பால் மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு வழிவகுக்க வேண்டும் என, குஜராத்தில் உள்ள அமுல் பால் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கே.ரத்னம் தெரிவித்தார். கோவை அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகத்தில், சத்தான உணவு தேசத்தின் அடித்தளம் என்ற தலைப்பில் வியாழக்கிழமை கருத்தரங்கம் நடந்தது. இதில், குஜராத்தில் உள்ள அமுல் பால் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ரத்னம் பேசியது: 1946-இல் பால் வாங்கி விற்கும் நிலையில் இருந்த அமுல் நிறுவனம், தற்போது இந்தியாவின் பெரிய பால் பதப்படுத்தும் நிறுவனமாக மாறியுள்ளது. எனினும், இந் நிறுவனம் தனது லாபத்தில் 80 சதவீதத்தை பால் உற்பத்தியாளர்களுக்கு அளிப்பது இந் நிறுவனத்தின் தனிச்சிறப்பாகும். பெண் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு ஏற்ற நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் குழந்தைகள்,

மூத்தவர்களுக்காக பாலில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பூட்டப்பட்ட பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இந்தியாவில் பாரம்பரிய உணவுகளை சந்தைக்கு கொண்டு வர வேண்டும். மேலும், மரபணு மேம்படுத்தப்பட்ட கால்நடைகள் மூலம் அதிக பால் உற்பத்தி செய்து தேசிய ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு வழிவகுக்க வேண்டும் என்றார். அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஷீலா ராமச்சந்திரன், உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை பேராசிரியர் கௌசல்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>மேட்டுப்பாளையம் மொத்த மார்க்கெட்டில் உருளைக்கிழங்கு விலை குறைந்தது</u>**

கேரளத்தில் நடைபெற்ற பந்த் காரணமாகவும், ஓணம் பண்டிகையையொட்டி வரத்து அதிகரித்ததாலும், புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் உருளைக்கிழங்கு மூட்டைக்கு ரூ.100 முதல் ரூ.150 வரை விலை குறைவாக விற்றது. மேட்டுப் பாளையத்தில் இயங்கி வரும் உருளைக்கிழங்கு மொத்த விற்பனை மையம் தென்னிந்திய அளவில் பிரசித்தி பெற்றது. இங்கு புதன்கிழமை நடைபெற்ற ஏலம் குறித்து மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தக பேரவை துணைத் தலைவர் எம்.என்.ஜி. கோபால் கூறியது: புதன்கிழமை ஏலத்திற்கு நீலகிரி கிழங்கு 25 லோடுகளும், கர்நாடக மாநிலம் ஹாசன் பகுதி கிழங்கு 37 லோடுகளும், திம்பம், தாளவாடி பகுதி கிழங்கு 10 லோடுகளும் வந்தன. இதில், 45 கிலோ கொண்ட 1 மூட்டை நீலகிரி கிழங்கு ரூ.1,350-ரூ.1,500 வரையும், ஹாசன் பகுதி கிழங்கு மூட்டை ரூ.900-ரூ.1,300 வரையும், திம்பம், தாளவாடி பகுதி கிழங்கு மூட்டை ரூ.1,100-ரூ.1,300 வரையும் விற்பனையானது. கேரளத்தில் ஆர்எஸ்எஸ் பிரமுகர் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து செவ்வாய்க்கிழமை பந்த் நடைபெற்றதால் அங்கு காய்கறி வாகனங்கள் செல்லவில்லை. இதனால், மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் உருளைக்கிழங்கு தேக்கம் ஏற்பட்டதாலும், கிழங்கு வரத்து அதிகமானதாலும், புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மூட்டைக்கு ரூ.100-150 வரை விலை குறைவு ஏற்பட்டது. 3 நாள்களுக்கு முன் நடைபெற்ற ஓணம் ஏல விற்பனையில் இதே நீலகிரி கிழங்கு மூட்டை (45 கிலோ) ரூ.1,500-1,700 வரையும், திம்பம் பகுதி கிழங்கு மூட்டை ரூ.1,450 வரையும், ஹாசன் பகுதி கிழங்கு ரூ.1,350 வரையும் விற்பனையானது என்றார்.

## பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை

பவானி, நெரிஞ்சிப்பேட்டை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு, சங்கத் தலைவர் எஸ்.எஸ்.மாரியப்பன் தலைமை வகித்தார். சங்கச் செயலர் கிருஷ்ணண் வரவேற்றார். முன்னாள் எம்.பி. என்.ஆர்.கோவிந்தராஜர் சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 72 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கினார். சங்கத்தின் துணைத் தலைவர் ராவுத்தம்மாள், ஒன்றிய மகளிரணிச் செயலர் மலர்கொடி நித்தியானந்தம், பழனியம்மாள், சுப்பராயன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## நேரடி நெல் விதைப்பு: விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

போளூர் ஒன்றியம் அனந்தபுரம் ஊராட்சியில் உள்ள பள்ளகொல்லை கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் நெல் பயிரில் நேரடி நெல் விதைப்பு பற்றிய பயிற்சிக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. போளூரை அடுத்த அனந்தபுரம் ஊராட்சியைச் சேர்ந்த பள்ளகொல்லை கிராமத்தில் போளூர் உதவி வேளாண்மை அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் நெல் பயிரில் நாற்றங்கால் மற்றும் நடவு செலவைக் குறைக்க நேரடி நெல் விதைப்பு பற்றிய பண்ணைப் பள்ளி பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்து விவசாயத்தில் நவீன வகை பயிர் சாகுபடி குறித்தும், குறைந்த செலவில் அதிக லாபம் பெறுவதற்கான வேளாண் தொழில் நுட்பங்களைப் பற்றியும் விளக்கிக் கூறினார். அட்மா திட்ட மாவட்டத் துணை இயக்குநர் சுந்தரம், வேளாண்மை அலுவலர் சித்ரா, வட்டார தொழில்நுட்ப வல்லுநர் வீரபாண்டியன், துணை தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜ்குமார், செல்வரசு ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் நன்றி தெரிவித்தார். அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## மேட்டூர் அணைக்கு 21 ஆயிரம் கன அடி நீர்வரத்து

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை காலை நொடிக்கு 21,856 கன அடியாக அதிகரித்தது. கேரள மாநிலத்தில் கபினி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அந்த அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கபினி அணை நிரம்பிய நிலையில், அணைக்கு வரும் உபரி நீர்

காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு கடந்த 3-ஆம் தேதி முதல் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. வியாழக்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 21,856 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் 103.22 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து பாசனத்துக்காக நொடிக்கு 18,812 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 67.07 டி.எம்.சி.யாக இருந்தது. ஒகேனக்கல்லில் நீர்வரத்து குறைந்தது தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் புதன்கிழமை நொடிக்கு 25,000 கன அடியாக இருந்த நீர்வரத்து வியாழக்கிழமை 18,000 கன அடியாகக் குறைந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாக இருந்தது. அருவிப் பகுதியில் பலரும் பரிசலில் சென்று இயற்கை அழகை ரசித்தனர்.

**நாகையில் நாளை கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறுமிடங்கள்**

நாகை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாகை மற்றும் மயிலாடுதுறை கோட்ட பகுதிகளில் சனிக்கிழமை (செப். 6) கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறுமிடங்களை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வெளியிட்டுள்ளார். இதுகுறித்து நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாகை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் செப். 1-ம் தேதி தொடங்கி 7-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதன்படி, நாகை மற்றும் மயிலாடுதுறை வருவாய்க் கோட்டங்களில் சனிக்கிழமை கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் நடைபெறுமிடங்களின் விவரம் (ஊராட்சி ஒன்றியம் - முகாம் நடைபெறும் கிராமங்கள்): நாகை - ஆலங்குடி, அந்தணப்பேட்டை, அக்கரைப்பேட்டை மற்றும் நகராட்சிப் பகுதிகள். திருமருகல் - மருங்கூர், புத்தகரம், சேஷமூலை, பில்லாளி, பண்டாரவாடை, தென்பிடாகை. கீழ்வேளூர் - ஓர்குடி, கொடியாலத்தூர், கிள்ளுக்குடி, பட்டமங்கலம். கீழையூர் - மீனம்பநல்லூர், சோழவித்தியாபுரம், திருமணாங்குடி, புதுப்பள்ளி, பெரிய வடக்குவெளி, சின்ன வடக்குவெளி. தலைஞாயிறு - வாட்டாக்குடி, கோவில்பத்து. வேதாரண்யம் - கரியாப்பட்டினம், வண்டுவாஞ்சேரி, முதலியார்தோப்பு, ஆதனூர். மயிலாடுதுறை - காளி, கடக்கம், வள்ளாலகரம். குத்தாலம் - பெரம்பூர், வானாதிராஜபுரம், கடலங்குடி. செம்பனார்கோவில் - மேலப்பெரும்பள்ளம்,

காளஹஸ்தினாபுரம், மாத்தூர். சீர்காழி - அகணி, மேலையூர். கொள்ளிடம் - மாதிரிவேளூர், உமையாள்பதி.

## விவசாயிக்கு ரூ. 20 ஆயிரம் இழப்பீடு வழங்க வங்கிக்கு நுகர்வோர் ஆணையம் உத்தரவு

கடன் வழங்க ஒப்புதல் அளித்த பிறகும், கடனை வழங்க மறுத்த யூகோ வங்கி ரூ. 20 ஆயிரம் இழப்பீடும், ரூ. 4 லட்சம் கடனையும் விவசாயிக்கு வழங்குமாறு தேசிய நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்த வழக்கு விவரம் வருமாறு:

ஹரியாணா மாநிலத்தைச் சேர்ந்தவர் ஷம்ஷேர் சிங். இவர் தனது பகுதியில் உள்ள யூகோ வங்கியில் நிலம் அடமானத்தின் பேரில் ரூ.5 லட்சம் கடன் கோரியிருந்தார். இதற்குத் தேவையான ஆவணங்களையும் வங்கியிடம் அளித்திருந்தார். அதைப் பரிசீலித்த வங்கி, ஷம்ஷேர் சிங்கிற்கு ரூ. 4 லட்சம் கடன் வழங்க ஒப்புதல் அளித்தது. இந்நிலையில், அவரது நிலம் வங்கிக் கிளையின் எல்லைக்குள்பட்ட பகுதியில் இல்லையெனக் கூறி கடன் வழங்க மறுக்கப்பட்டது. இதையடுத்து, தனக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.4 லட்சம் கடனையும், மனஉளைச்சல் ஏற்பட்டதற்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடும், வழக்குச் செலவுகளுக்கு ரூ. 11 ஆயிரமும் சம்பந்தப்பட்ட வங்கி வழங்கக் கோரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்தில் ஷம்ஷேர் சிங் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நுகர்வோர் குறைதீர் மன்றம், ஷம்ஷேர் சிங்கிற்கு யூகோ வங்கி ரூ.4 லட்சம் கடன், ரூ.20 ஆயிரம் இழப்பீடு, வழக்குச் செலவுத் தொகையாக ரூ. 5 ஆயிரம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட வங்கிக்கு உத்தரவிட்டது. இதையடுத்து, வங்கியின் சார்பில் ஹரியாணா மாநில நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இது தொடர்பான மனுவை விசாரித்த மாநில நுகர்வோர் குறைதீர் மன்றம் மாவட்ட குறைதீர் மன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து உத்தரவிட்டது. இதையடுத்து, தில்லியில் உள்ள தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் யூகோ வங்கி சார்பில் மறுஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், "புகார்தாரர் (ஷம்ஷேர் சிங்) தனது நிலத்திற்கான முறையான ஆவணங்களை அளிக்கவில்லை. அதன் அளவு குறித்தும் அவர் பொய்யான தகவல்களை அளித்திருந்தார். அதனால், அவருக்கு கடன் வழங்க வங்கியால் மறுக்கப்பட்டது" என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணைய நீதிபதி வி.கே. ஜெயின் பிறப்பித்த உத்தரவில், "புகார்தாரர் (ஷம்ஷேர் சிங்) கடன்

கோரி அளித்த நிலத்திற்கான அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பிறகே கடன் வழங்க வங்கி ஒப்புதல் தெரிவித்துள்ளது. அதன்பிறகு, கடன் வழங்க மறுத்து கூறும் காரணம் ஏற்புடையதல்ல. கடன் வழங்க மறுப்பது மொத்தத்தில் நியாயமற்றதாகும். ஆகவே, புகார்தாரரான விவசாயிக்கு ரூ. 4 லட்சம் கடனையும், ரூ. 20 ஆயிரம் இழப்பீடு, ரூ.5 ஆயிரத்திற்கான வழக்குத் செலவுத் தொகையை மனுதாரர் (யூகோ) வங்கி வழங்க வேண்டும் என்ற மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>யூரியா உற்பத்தி திட்டங்களுக்கு ரூ.10 ஆயிரம் கோடி ஒப்புதல்</u>**



புதுடில்லி: மூடப்பட்ட பொதுத்துறை யூரியா ஆலைகளை மறுசீரமைக்கும் வகையில், கடந்த 100 நாட்களில், 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என, மத்திய உரத்துறை அமைச்சர் ஆனந்த் குமார் தெரிவித்தார்.இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:யூரியா உற்பத்தியில் தன்னிறைவு காண்பதை, மத்திய அரசு, இலக்காக கொண்டுள்ளது. இதனடிப்படையில், தல்சர், ராமகுண்டம், ஹால்டியா, கோராக்பூர் உள்ளிட்ட அ இடங்களில் மூடப்பட்ட யூரியா உற்பத்தி ஆலைகளை மறுசீரமைக்க, கடந்த 100 நாட்களில், 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. இதுவே, கடந்த 10 ஆண்டுகளில், உரத் துறைக்கு வழங்கப்பட்ட முதல் அதிகபட்ச முதலீட்டு திட்டமாகும். இந்த கால கட்டத்தில், உள்நாட்டில் புதிதாக உரத் தொழிற்சாலைகள் எதுவும் துவக்கப்படவில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## நெல்லுக்கு பதிலாக எள்; விவசாயிகள் ஆர்வம்

பொன்னேரி : நிலத்தடி நீர் உவர்ப்பால், நெல் பயிரிட முடியாமல், மழைநீரை நம்பி, எள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மீஞ்சூர் ஒன்றியம், அனுப்பம்பட்டு, உத்தண்டி கண்டிகை ஆகிய பகுதிகளில், நெல் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர். ஒரு சிலர், நெல்லுக்கு பதிலாக, எள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.விதைக்கப்பட்ட நாளில் இருந்து, 70 நாட்களில் அறுவடை செய்யும் இப்பயிருக்கு, குறைந்த நீராதாரம் இருந்தால் போதுமானது. குறைந்த முதலீட்டில், ஓரளவிற்கு லாபம் தரக்கூடிய பயிராக, எள் பயிர் உள்ளது. அறுவடை காலத்தில், ஒரு ஏக்கருக்கு, இரண்டு அல்லது மூன்று மூட்டை வரை எள் கிடைக்கிறது. செலவு போக, மூட்டைக்கு, 3,000 ரூபாய் வருவாய் ஈட்டப்படுகிறது. இதுகுறித்து, எள் பயிரிட்டு உள்ள உத்தண்டிகண்டிகை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சங்கரநாராயணன் கூறுகையில், "எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் உவர்ப்பாக மாறிவிட்டது. நிலத்தை தரிசாக போட விருப்பம் இல்லை. அதனால், எள் விதைத்து உள்ளேன். ஓரளவிற்கு வருவாய் கிடைக்கிறது," என்றார்

## தீவனமாக வெள்ளை சோளம்; பயன்படுத்த அறிவுறுத்தல்

திண்டுக்கல் : மானிய விலை வைக்கோல் விற்பனை நிறுத்தப்பட்டிருப்பதால் கால்நடைகளுக்கு தேவையான தீவனத்திற்கு வெள்ளை சோளத்தை பயன்படுத்துமாறு விவசாயிகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வறட்சியினால் ஏற்பட்ட தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக அரசு சார்பில் மானிய விலை வைக்கோல் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டது. ஏராளமான விவசாயிகள் இதனால் பயனடைந்தனர். மழை காலத்திற்கு முன்னதாக தீவன

உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக விவசாயிகளுக்கு வெள்ளை சோளம் சாகுபடிக்கான மானியம் வழங்கப்பட்டது.தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் மானிய விலை வைக்கோல் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. மையங்களுக்கு வருபவர்களிடம் வெள்ளை சோளத்தை தீவனமாக பயன்படுத்துமாறு கால்நடைத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர். வைக்கோல் தேவைப்படும் விவசாயிகள் தனியார்களிடம் வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

## திரவ உயிர் உரங்களை விவசாயிகள் பயன்படுத்த விருப்பம்! நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு

காரைக்குடி : விவசாயத்துக்கு காத்திருக்கும் விவசாயிகள், தொழில் நுட்பத்தில் வெளி வந்துள்ள, திரவ உயிர் உரத்தை பயன்படுத்த, வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். பல ஆண்டுக்கு முன்னர் இலை, தழை மற்றும் தொழு உரங்களை மட்டுமே வேளாண்மைக்கு விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். அதிக மகசூல் கிடைத்ததுடன், அதன் தரமும் சுவையும் நன்றாக இருந்தது. காலப்போக்கில் இயற்கை உரங்களின் பயன்பாடு குறைய, ரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகளை அதிகம் பயன்படுத்த தொடங்கினர். இதன் காரணமாக, நிலத்தில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை குறைய தொடங்கியது. வேளாண் துறை சார்பில் திட உயிர் உரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது. இந்த திட உயிர் உரங்கள், புற ஊதாக் கதிர்களால் பாதிக்கப்படுவதுடன், 30 டிகிரிக்கு மேல் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டது. தயாரித்த நாளிலிருந்து 6 மாதங்கள் வரை மட்டுமே பயன்படுத்த முடியும். தயாரிக்கும்போது நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை 10 கோடி என்ற அளவில் இருக்கும். ஆறு மாத முடிவில், 10 லட்சமாக குறைந்து விடும். இதன் காரணமாக திட உயிர் உரங்களுக்கு விவசாயிகள் மத்தியில் போதிய வரவேற்பு இல்லாமல் இருந்தது. இதை தவிர்க்க தற்போது புதிய தொழில் நுட்பத்தில், திரவ உயிர் உரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கல்லல் வேளாண் உதவி இயக்குனர் கணேசன் கூறும்போது: திரவ உயிர் உரங்கள் 55 டிகிரி வெப்பத்திலும் முழு

பாதுகாப்புடன் இருக்கும். புற ஊதா கதிர்கள் மூலம் பாதிக்கப்படுவதில்லை. நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை 12 மாதங்களுக்கு குறையாமல் அதே அளவில் இருக்கும். ஒரு மி.லி., ஒரு கிலோ திட உயிர் உரத்துக்கு சமமாகிறது. கை மற்றும் விசை தெளிப்பான் மூலமாகவும், உரம் கலக்கும் தொட்டியின் மூலம் அடியுர மாகவும், தொழு உரத்துடனும் வயலுக்கு இடலாம். திரவ உயிர் உரங்களில் நுண்ணுரங்கள் இருப்பது மட்டுமன்றி, விதை மற்றும் நிலத்தில் பயன்படுத்தும் பொழுது சிறப்பாக செயல்பட்டு எவ்வித சூழ்நிலையிலும் சேதமின்றி பயனளிக்கிறது. எனவே அதிக மகசூல் பெற்றிடவும், நிலத்தில் இயற்கையாக உள்ள, நுண்ணுயிரிகளை காத்திடவும், விவசாயிகள் திரவ உயிர் உரங்களை பயன்படுத்திட வேண்டும், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேலூர்,ஆற்காட்டில் மழை**

ஆற்காடு, :ஆற்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று காலையிலிருந்து வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. இந்நிலையில் நேற்று மாலை திடீரென வானத்தில் கருமேகங்கள் திரண்டதோடு, திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. மேலும் பலத்த காற்றும் வீசியது. திடீர் மழையால் சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போன்று நேற்று வேலூர் சுற்று வட்டார பகுதி களிலும் மழை பெய்தது.

## துறையூர்ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சின்னவெங்காயம் 5,242 கிலோ ஏலம்

திருச்சி,: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று 5,242 கிலோ சின்ன வெங்காயம் ஏலம் விடப்பட்டது. இடைத்தரகர்கள் இன்றி கமிஷன் இல்லாமல் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் கடந்த 8வாரமாக புதன்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.நேற்று நடந்த மறைமுக ஏலத்தில் உப்பிலியபுரம் வட்டாரம் பி.மேட்டூர், வடக்கிப்பட்டி, சங்கம்பட்டி, கீரம்பூர் ஆகிய ஊர்களில் இருந்து 127மூட்டை சின்ன வெங்காயத்துடன் 24 விவசாயிகள் பங்கேற்றனர். இதே போல் நாமக்கல், மன்னார்குடி, அம்மாபாளையம், துறையூர் ஆகிய ஊர்களில் இருந்து 12வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.68,730 மதிப்பில் 5,242 கிலோ சின்ன வெங்காயம் ஏலம் போனது. இதில் தரமான வெங்காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.23க்கும், சராசரியாக கிலோ ரூ.17க்கும் ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி,கமிஷன் இல்லாமல் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் அடுத்த வாரம் புதன்கிழமை தொடர்ந்து சின்ன வெங்காயம் ஏலம் நடை பெற உள்ளதால் இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து மறை முக ஏலத்தில் கலந்து கொள்ளும்படியும், வெங்காயத்திற்குரிய பணத்தையும் உடனே பெற்றுக் கொள்ளலாம் என வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கேட்டு கொண்டார்.

## திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் ஒரு வாழைத்தார் ரூ.440க்கு ஏலம்

திருச்சி,: திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை சார்பில் திருச்செந் துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் புதன்கிழமை தோறும் கடந்த 4 வாரமாக வாழைத்தார்கள் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டம்

குளித் தலை, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு ஈச்சங்கோட்டை, திருச்சி மாவட் டம் திருச்சி, அந்தநல்லூர், ஜீயபுரம் ஆகிய இடங்களில் இருந்து விவசாயிகள் வாழைத்தார் களை லாரிக ளில் கொண்டு வந்தனர்.இதில் ஏலம் எடுப்பதற்காக குளித்தலை, திருச்சி, லால்குடி, பெருக மணி, பெட்டவாய்த்தலை ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகளும் வந்திருந்த னர். பூவன், ரஸ்தாலி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட ரக வாழைத்தார் கள் ஏலத்திற்காக குவிந்தன. இந்த பொது ஏலத்தில் 469 வாழைத் தார்களுடன் 12 விவசாயிகள் பங்கேற்றனர். 11 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர்.மொத்தம் ரூ.83,8 25க்கு வாழைத்தார்கள் ஏலம் போனது. ஒரு வாழை த்தார் அதிக பட்சமாக ரூ.440க்கும், சராசரி ரூ.175க்கு ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் ஏலத் தில் பங்கேற்ற விவசாயிகளு க்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட் டது. மேலும் அடுத்தவாரம் தொடர்ந்து வாழைத்தார்கள் ஏலம் நடைபெற உள்ளதால் விவசாயிகள் அனைவரும், தங்களிடம் உள்ள வாழைத்தார்களை கொண்டு வந்து பொது ஏலத்தில் கலந்து கொள்ளும்படி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டார்.

## பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை பயிற்சி

செய்யாறு, :வேலூர் மாவட்டம் கலவை ஆதிபராசக்தி வேளாண் மற்றும் தோட்டகலை கல்லூரி மாணவர்கள் மிதுன்பேபிச்சந்த், மனோ, பிரபு, நடராஜன், பிரதீப், பிரேம்குமார் ஆகியோர் செய்யாறு அடுத்த தூசி, வெம்பாக்கம், பில்லாதாங்கல், தண்டப்பந்தாங்கல் உள்ளிட்ட கிராமங்களில் முகாமிட்டு வேளாண் துறையில் நவீன தொழில் நுட்பங்கள் கையாளுவதை விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்கள். பில்லாதாங்கல் கிராமத்தில் நடந்த செயல்முறை பயிற்சியை ஊராட்சி மன்ற தலைவர் பி.செல்வம் தொடங்கி வைத்தார். இதில் வேளாண் கல்லூரி மாணவர்கள் இயற்கையில் பூச்சிகளை விரட்டும் செயல்முறை விளக்கம் அளித்தனர். தூசியில் வெம்பாக்கம் வேளாண் துறையுடன் இணைந்து கல்லூரி மாணவர்கள் வேளாண் கண்காட்சி அமைத்திருந்தனர். இதை,

நூற்றுகணக்கான விவசாயிகள் பார்வையிட்டு வேளாண்மை தொழில்நுட்பங்களை கேட்டுச் சென்றனர்.

## <u>ஆழியார் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது</u>

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி அடுத்த ஆழியார் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், அணை நிரம்ப இன்னும் இரண்டு அடியே உள்ளது என்று பொதுப் பணித்துறையினர் தெரிவித்தனர். பொள்ளாச்சி அடுத்த ஆழியார் அணையிலிருந்து பழைய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளான வேட்டைக்காரன்புதூர், பொள்ளாச்சி, சேத்துமடை கால்வாய் வழியாக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடு என்று உயர்ந்துள்ளது. மொத்தமுள்ள 420அடி கொண்ட ஆழியார் அணையின் நீர்மட்டம் கடந்த வாரம் 445 அடியாக உயர்ந்திருந்தது. பின்னர் அந்நேரத்தில் மழைப்பொழிவு குறைந்ததால், அணைக்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைந்தது. இதனால், கடந்த ஒரு வாரமாக நீர்மட்டம் உயராமல், அணை நிரம்ப தாமதமானது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக மேற்குதொடர்ச்சி மலைபகுதியில் தொடர்ந்து மழைபொழிவு இருப்பதால், ஊட்டுக்கால்வாய் மற்றும் குரங்கு அருவி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளது. தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 448 அடியை எட்டியது. அணை நிரம்ப இன்னும் இரண்டு அடியே உள்ளது. தற்போது வினாடிக்கு 4300கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஓரிரு நாட்களில் அணை நிரம்பும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘ஆழியார் அணையின் நீர்மட்டம் தற்போது 448 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், இன்னும் ஓரிரு நாட்களில், அணையின் மொத்த அடியான 420 அடியை எட்டி விடும். அணை நிரம்பும் போது,

அணையின் பாதுகாப்பு கருதி, மெயின் மதகுகள் வழியாக ஆற்றில் தண்ணீர் திறக்கப்படும். அணை நிரம்ப உள்ளதால், ஆற்றோரத்தையொட்டி வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' என்றனர். மேற்குதொடர்ச்சி மலை பகுதியில் நேற்று பெய்த மழையளவு வருமாறு: பரம்பிக்குளம் 48மிமீ(மில்லிமீட்டரில்), ஆழியார் 6மிமீ, மேல்நீரார் 94மிமீ, கீழ்நீரார் 62மிமீ, வேட்டைக்காரன்புதூர் 44மிமீ, மணக்கடவு 52மிமீ, நெகமம் 44மிமீ, நவமலை 7மிமீ, சர்க்கார்பதி 48மிமீ, தூணக்கடவு 25மிமீ, பெருவாரிபள்ளம் 28மிமீ, காடம்பாறை 24மிமீ என்ற அளவில மழை பதிவாகியுள்ளது.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி கால்நடை மருந்தகம் சார்பில் நாகம்பள்ளியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. அரவக்குறிச்சி ஒன்றியம் நாகம்பள்ளியில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை நாகம்பள்ளி ஊராட்சி தலைவர் பழனியம்மாள் துவக்கி வைத்தார். கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க செயலளர் கணே சன் முன்னிலை வகித்தார். முகாமில்கால்நடை மருந்தக உதவி மருத்துவர் ராஜேந்திரன் தலைமையில் கால்நடை ஆய்வாளர்கள் தாமோதரன், தமிழ்ச்செல்வி, உதவியாளர் பழனியம்மாள் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் 165 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். சுற்றுப்பகுதி யை சேர்ந்த மாடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

## <u>சிறுதானிய பயிர்களுக்கு 100 % மானியம் வழங்க கோரிக்கை</u>

கடலூர், : சிறு தானிய பயிர்களுக்கு 100 சதவீதம் மானியம் வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் தங்கவேல் கூறியதாவது: சிறுதானிய பயிர்களான சாமை, வரகு, குதிரை வாளி, தென்னை, எள்ளு உள்ளிட்ட சிறுதானிய பயிர்களுக்கு தமிழக அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்த சிறு தானியங்கள் மானாவாரி விவசாயமாக உள்ளது. மானாவாரி என்பது ஒரு

இயற்கையை சார்ந்த உற்பத்தியாகும். கரூர் மாவட்டம் வறட்சி பகுதியாக உள்ளது. ஆகவே மானாவாரி பயிர் செய்யும்போது மழை இன்மையால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே அரசு சிறுதானியங்களுக்கு உழவுகூலி உள்பட 100 சதவீதம் மானியம் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## கோமாரி தடுப்பூசி முகாம்

வேதாரண்யம், : வேதாரண்யம் தாலுகா கடினல்வயல் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில் 156 கால்நடைகளுக்கும், 135 கோழிகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் மீனாட்சி சுந்தரம், கால்நடை ஆய்வாளர்கள் பழனியம்மாள், ரோஸ்லின், சத்யபாமா, கால்நடை உதவியாளர் பன்னீர்செல்வம், ஊராட்சி தலைவர் மலர்விழி தமிழழகன், துணை தலைவர் நாகலெட்சுமி, பாலசுப்பிரமணியன் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## உற்பத்தி அதிகரிப்பால் தக்காளி விலை வீழ்ச்சி பொதுமக்கள் மகிழ்ச்சி

சின்னமனூர், : தக்காளி உற்பத்தி அதிகரித்திருப்பதால் கிலோ ரூ.12க்கு வீழ்ச்சி அடைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூரைச் சுற்றியுள்ள அய்யம்பட்டி, புலிக்குத்தி, எல்லப்பட்டி, அம்மாபட்டி, குச்சனூர், அப்பிபட்டி, முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம், சீப்பாலக்கோட்டை, சீலையம்பட்டி என பல கிராமங்களில் பல நூற்றுக்கணக்கான ஏக்கரில் 60 நாள் பயிரான ஹைபிரிட் வகை தக்காளி பயிர் செய்துள்ளனர். ஏக்கருக்கு 200 கிராம் விதையினை தெளித்து நாற்றாக வளர்க்கின்றனர். நடவு செய்து களையெடுப்பு, உரம் மருந்து தெளித்து ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் வரை செலவு செய்கின்றனர்.ஏலச்சந்தையில் 15 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டிரூ.450க்கு ஏலம் போனதால் கிலோ ரூ.40 முதல் 50 வரையில் விற்கப்பட்டது. பொதுமக்கள் கடந்த சில மாதங்களாக தக்காளி வாங்கிட முடியா மல் சிரமம் அடைந்தனர். சின்னமனூர் பகுதிகளில் தக்காளி அதிகளவு பயிரிட்டதாலும் தற்போது மழையும்

குறிப்பிட்ட நேரத்தில் பெய்ததாலும் நோய்தாக்குதல் தென்படாமல் வரத்து அதிகரித்துள்ளது. தற்போது லோடு கணக்கில் சின்னமனூர் ஏலச்சந்தைக்கு தக்காளி பெட்டி பெட்டியாக வந்து குவிந்துள்ளது. அதனால் ஒரு பெட்டி ரூ.160க்கு ஏலம் போனதால் வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ.12 முதல் ரூ.15 வரையில் விற்கப்படுகிறது. அதிக விலைக்கு வாங்கி சிரமம் அடைந்து வந்து பொதுமக்கள் விலை சரிவால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கால், அரை கிலோ என வாங்கிய நிலையில் ஒரு கிலோ இரண்டு கிலோ என மொத்தமாக வாங்கி செல்கின்றனர்.

## மலையோர பகுதிகளில் கனமழை நீடிப்பு பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 69 அடியாக உயர்ந்தது

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் கனமழை பெய்து வரும் நிலையில் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 69 அடியாக உயர்ந்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்றும் காலை முதல் கனமழை பெய்து வருகிறது. தொடர் மழையால் பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1080 கன அடியும், பெருஞ்சாணி அணைக்கு 1592 கன அடியும் தண்ணீர் வரத்து உள்ளது. மலையோர பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக திற்பரப்பு அருவியில் அதிக அளவு தண்ணீர் கொட்டுகிறது. மாவட்டத்தில் சாலைகள் குண்டு குழியுமாக மாறி வருகின்றன. தார் வைக்கப்பட்டு பேட்ஜ் ஒர்க் செய்யப்பட்ட இடங்களில் அவை பெயர்ந்து பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. நாகர்கோவில் நகர பகுதிகளில் பல இடங்களிலும் சாலைகள் தோண்டப்பட்டு பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடப்பதால் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டும், மழைநீர் தேங்கிய பள்ளத்தில் வாகனங்கள் சிக்கியும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. ராஜாக்கமங்கலம் அருகே காக்காதோப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு மரம் முறிந்து சாலையில் விழுந்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்பு துறையினர் மரத்தை அப்புறப்படுத்தினர். இதுபோன்று தம்மத்துக்கோணம் அருகிலும் தென்னை மரம் முறிந்து விழுந்தது. மரத்தை பொதுமக்களே அப்புறப்படுத்தினர். நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 26.50 அடியாக இருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 68.60

அடியாக இருந்தது. சிற்றார்-1ல் 13.81 அடியும், சிற்றார்-2ல் 13.90 அடியும், பொய்கையில் 5.30 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. 77 அடி உச்சநீர்மட்டம் கொண்ட பெருஞ்சாணி அணையில் இன்னும் ஒரே நாளில் நீர்மட்டம் 70 அடியை தொடும் வாய்ப்பு இருப்பதால் பொதுப்பணித்துறையால் பெருஞ்சாணி அணைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படும் வாய்ப்பு உள்ளது. மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாக உள்ளது. அணைக்கு 30 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில் 30 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. நாகர்கோவில் நகர பகுதிக்கு குடிநீர் வழங்கி வருகின்ற முக்கடல் அணையின் நீர்மட்டம் 16.50 அடியாக உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவட்டாரில் 73.2 மி.மீ மழை பதிவாகி இருந்தது. மழையளவு(மி.மீ)

பேச்சிப்பாறை:20.6

பெருஞ்சாணி:23.8

சிற்றார்-1:14.6

சிற்றார்-2:19.2

பொய்கை:31

மாம்பழத்துறையாறு:30

இரணியல்:9.4

ஆனைக்கிடங்கு:25

குளச்சல்:26

குருந்தன்கோடு:13.2

அடையாமடை:41

கோழிப்போர்விளை:15.5

திருவட்டார்:73.2

முள்ளங்கினாவிளை:23

புத்தன்அணை:22.6

பூதப்பாண்டி:10

சுருளோடு:14.2

கன்னிமார்:15.2

பாலமோர்:42.4

கொட்டாரம்:9.2

முக்கடல்:30

**<u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

திருப்பூர், : கலெக்டர் கோவிந்தராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு 7வது கால் மற்றும் வாய் நோய் (கோமாரி) தடுப் பூசி பணி 4ம் தேதி (இன்று) முதல் 24ம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளது. கலப்பின மாடுகளை கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயினால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளில் சினை பிடிப்பு தடைபடுகிறது. மேலும் இளங்கன்றுகளில் இறப்பு சதவீதம் அதிகமாக ஏற்படும். ஆகவே திருப்பூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்கள் பசுக்கள், எருமைகள் மற்றும் 4 மாதங்களுக்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு செப்டம்பர் 4ம் தேதி (இன்று) முதல் 24ம் தேதி வரை ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தங்களது கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கோமாரி நோய் தடுப்பூசி பணியினை திருப்பூர் மாவட்ட கலெக்டர் 4ம் தேதி (இன்று) காலை 9 மணிக்கு அவிநாசி ஊராட்சி ஒன்றியம் கருமாரம்பாளையம் கிராமத்தில் துவக்கி வைக்க உள்ளார. இவ்வாறு கூறியுள்ளார்.

## முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்க உத்தரவு

விவசாயிகள் பட்டாசு வெடித்து கொண்டாட்டம் வாடிப்பட்டி, : முதல் போக நெல் சாகுபடிக்கு வைகை அணையில் இருந்து நாளை தண்ணீர் திறக்கப்படுமென அரசு அறிவித்ததை தொடர்ந்து விவசாயிகள் பட்டாசு வெடித்து கொண்டாடினர். திண்டுக்கல் மாவட்டம், பேரணை முதல் மதுரை மாவட்டம், கள்ளந்திரி வரையில் சுமார் 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஆண்டுதோறும் இருபோகத்தில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. வைகை அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர் முல்லை பெரியாறு பிரதான கால்வாய் மூலம் நேரடியாக சாகுபடிக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் இருபோகம் ஒரு போகமானது. கடந்த ஜூன் முதல் வாரமே முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விவசாய பணிகளை துவக்கியிருக்க வேண்டும். அணையில் போதிய நீர்வரத்து இல்லையென தண்ணீர் திறக்கப்படவில்லை. முதல் போக சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் திறக்கக்கோரி இப்பகுதி விவசாயிகள் கடந்த சிலதினங்களுக்கு முன்பு மதுரையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். நேற்று முன்தினம் வரை தண்ணீர் திறப்புக்கான அறிவிப்பும் வராததால், வாடிப்பட்டி அருகே ஆண்டிபட்டி பங்களாவில் விவசாயிகள் அடுத்தக்கட்ட போராட்டம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டம் துவங்க ஆரம்பித்தபோது பொதுப்பணித்துறை அதிகாரிகள், வாடிப்பட்டி தாசில்தார் குமார் மற்றும் போலீஸ் அதிகாரிகள் பேரணை முதல் கள்ளந்திரி வரை முதல்போக நெல்சாகுபடிக்கு நாளை தண்ணீர் திறக்கப்படும் என அரசு அறிவித்துள்ளதாக கூறினர். அதனை உறுதிப்படுத்திய விவசாயிகள் முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர். பின் தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் வகையில் பட்டாசு வெடித்து கொண்டாடினர். நிகழ்ச்சியில் சோழவந்தான் எம்எல்ஏ கருப்பையா, விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தேவராஜன், ராமசாமி, நடராஜன் மற்றும் அதிமுக ஒன்றிய செயலாளர் செல்லப்பாண்டி, நகர செயலாளர் பாப்புரெட்டி ஒன்றிய சேர்மன் அன்னகளஞ்சியம், துணை சேர்மன் ராஜேஸ்கண்ணா, அதிமுக நிர்வாகிகள் பங்களா மூர்த்தி, சந்தனதுரை, நடராஜன், கார்த்திக், தங்கராஜ் மற்றும்

விவசாயிகள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். விவசாய சங்க நிர்வாகி நடரா ஜன் கூறுகை யில், 'அறிவிப்பு தாம தமாக வந்தாலும் கொடுத்தாலும் மகிழ்ச்சியாக உள்ளது. இனிவரும் காலங்களிலாவது அரசு அணைகள் நீர்ப்பங்கிட்டு விதிகளின்படி காலதாமதம் ஏற்படுத்தாமல் பாசனத்திற்கான நீரினை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார். விவசாயிகள் பயிற்சி முகாம் ராமநாதபுரம், : நயினார்கோவில் ஒன்றியம் சின்ன அக்கிரமேசி கிராமத்தில் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) மனோ கரன் தலைமை வகித்தார். வேளாண்மை விரிவாக்க துணை இயக்க வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துக்குமாரவேல், தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் ஆகியோர் பயி ற்சி அளித்தனர். அவர்கள் பேசியதாவது: அதிக விலை கொடுத்து வாங்கும் உரங்களை முறையாக பயன்படுத்தினால் மட்டுமே முழு பயனும் பயிர்களுக்கு கிடைக்கிறது. சூப்பர்பாஸ்பேட் உரத்தின் உபயோகத்திறனை அதிகரிப்பதன் மூலம் சாகுபடி செலவு குறைவதுடன் அதிக மகசூல் பெற முடியும். சூப்பர்பாஸ்பேட் உரத்தின் உபயோகத்திறனை அதிகரிக்கும் உத்தியே, ஊட்டமேற்றிய தொழுஉரம் தயார் செய்து இடும் முறையாகும். மணிச்சத்து உரத்தை அடியுரமாக இடும்போது, பயிரின் வேர் வளர்ச்சி தூண்டப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும் என்றனர். உதவி அலுவலர் நாகராஜ ன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள்

ராமநாதபுரம்,: தேவிபட்டினம் அரசு தென்னை நாற்றுப்பண்ணையில் உலக தென்னை தினவிழா நடந்தது. மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர்கள் அரிவாசகன் (மாநில திட்டம்) உதுமான்முகைதீன் (உழவர் பயிற்சி நிலையம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்னை சாகுபடி செய்வதில் அதிக வருமானம் ஈட்டலாம். சொட்டு நீர் பாசனத்தில் இதன் விவசாயத்தை மேலும் விரிவு படுத்தலாம். தென்னை மரங்களை தாக்கும் சிவப்பு கூண் வண்டுகளை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை பயன்படுத்தி அதனை அழிக்கவேண்டும். அரசு பண்ணையில் பல ரகங்களில் பலன்தரும் தென்னங் கன்றுகள் விற்பனைக்கு

உள்ளது. விவசாயிகள் இதனை வளர்க்கும்முறை குறித்து ஆலோசனையும் வழங்கப்படுகிறது என வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர். விழாவில், வேளாண் அலுவலர் ராஜலெட்சுமி, உதவி வேளாண்மை அலுவலர் சுதாமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோசலாதேவி, தொழில்நுட்ப வல்லுநர் சேகர் உள்ளிட்டோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர். விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கபினி அணை நீர்வரத்தால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 21 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு</u>**



கபினி அணை நீர்வரத்தால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 21 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரிப்பு கேரள மாநிலத்தின் வயநாடு பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் கர்நாடக மாநிலம் கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் அணையின் பாதுகாப்பு கருதி கடந்த 1–ந் தேதி முதல் 25 ஆயிரம் கனஅடி உபரிநீர் ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதேபோல கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்தும் வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் திறந்து

விடப்பட்டது. கர்நாடக அணை யிலிருந்து திறந்து விடப்பட்ட உபரிநீர் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் காலை முதல் வரத்தொடங்கியது. நேற்று முன்தினம் அணைக்கு 13 ஆயிரத்து 37 கனஅடியாக வந்து கொண்டிருந்தது. நீர்வரத்து நேற்று காலை 21 ஆயிரத்து 758 கன அடியாக அதிகரித்து உள்ளது. 103 அடி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவை விட அணைக்கு வரும் நீர்வரத்து அதிகமாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 103.22 அடியாக இருந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 18 ஆயிரத்து 900 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்



கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குவதை தடுக்கும் வகையில் வருகிற 21–ந் தேதி வரை தமிழகம் முழுவதும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்களை நடத்தும்படி முதல்– அமைச்சர் ஜெயலலிதா உத்தர விட்டிருந்தார். அதனை தொடர்ந்து கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி ஆலோ சனையின் பேரில் நொய்யல் மற்றும் மரவாபாளையம் சுற்றுவட்டார பகுதிகளில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட கால்நடைதுறை மண்டல இணை இயக்குநர் தங்கராசு தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் டாக்டர் தமிழரசன் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டார். முகாமில் நொய்யல் மற்றும் மரவாபாளையம்

சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 400–க்கும் மேற்பட்ட பசு மற்றும் எருமை மாடுகளை கொண்டு வந்து கோமாரி நோய் தடுப்பூசிகள் போட்டு சென்றனர். முகாமில் கோம்புப்பாளையம் ஊராட்சி தலைவர் பசுபதி, துணைத் தலைவர் திலகவதி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் மாரப்பன் கால்நடை பராமரிப்பு உதவியாளர் மாலதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**திருமருகல் ஒன்றியத்தில் சம்பா சாகுபடி நேரடி நெல் விதைப்பு பணிகள் வேளாண்மை அதிகாரி ஆய்வு**




திருமருகல் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் சம்பா நேரடி நெல் விதைப்பு பணிகளை வேளாண்மை அதிகாரி நேரில் பார்வையிட்டு ஆவு செய்தார். அதிகாரி ஆய்வு நாகை மாவட்டம் கடைமடை பாசன பகுதியான திருமருகல் ஒன்றியத்தில் 11 ஆயிரத்து 500 எக்டேரில் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. இதில் பல இடங்களில் விவசாயிகள் சம்பா நேரடி நெல் விதைப்பு செய்துள்ளனர். திருமருகல் ஒன்றிய பகுதியில் மழையில்லாததால் பல இடங்களில் விதைகள் முளைக்காமலும், சில இடங்களில் முளைத்த பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்தும் வருகிறது. இந்நிலையில் திருமருகல் ஒன்றியத்தில் நேரடி விதைப்பு செய்துள்ள வயல்களை நாகை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். திருமருகல், திருச்செங்காட்டங்குடி,

திருக்கண்ணபுரம், புளியக்குடி ஆகிய கிராமங்களில் சி.ஆர்.1009 ரக நேரடி நெல் விதைப்பு செய்துள்ள வயல்களை அதிகாரி பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அந்தந்த பகுதி விவசாயிகளிடம் சம்பா சாகுபடி குறித்த தொழில் நுட்பங்கள், சாகுபடி செலவு, மகசூல் நிகர வருமானம் ஆகியவை பற்றி விளக்கி கூறினார். பின்னர் அவர் திருமருகல் வட்டார வேளாண்மை அலுவலகத்திற்கு சென்று இருப்பு மற்றும் பணிகளை ஆய்வு செய்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

களை மேலாண்மை நாகை மாவட்டத்தில் நெல் சாகுபடி சம்பா பருவம் தொடங்கி இதுவரை 24 ஆயிரத்து 332 எக்டேரில் சி.ஆர் 1009, பி.பி.டி. 5204, ஸ்வர்ணாசெப்-1 ஆகிய நெல்ரகங்கள் நேரடி நெல் விதைப்பாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 24 ஆயிரத்து 482 எக்டேரில் நேரடி நெல் விதைப்பு மூலம் கூடுதல் சாகுபடி பரப்பு எதிர்பார்க்கப்படுகிறது. நாகை மாவட்ட விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்த வயல்களில் களைகளை கட்டுப்படுத்திட களை மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும். அதிக மகசூல் களைக்கொல்லி தெளிப்பதற்கு போதுமான ஈரப்பதம் இருப்பதை விவசாயிகள் உறுதி செய்த பின்னர் கைத்தெளிப்பான் மூலம் பின்னோக்கி நடந்தபடி தெளிக்க வேண்டும். இவ்வாறு நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் தொழில் நுட்பங்களை கடைபிடித்து களை மேலாண்மை செய்து அதிக மகசூல் பெறவேண்டும். தேசிய உணவு பாதுகாப்பு இயக்க செயல் விளக்கம் செய்திட தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் பிரப்டியா குளேன் மற்றும் பிஸ்பைரிபேக் சோடியம் களைக்கொல்லிகளை வேளாண்மை அலுவலகத்தில் இதர இடுபொருட்களுடன் பெற்று பயன்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின் போது நாகை வேளாண்மை துணை இயக்குநர் கணேசன், திருமருகல் வேளாண்மை இணை இயக்குநர் ராஜா, வேளாண்மை அலுவலர் சங்கரநாராயணன், உதவி வேளாண்மை அலுவலர் ராஜகோபால், ஊராட்சி மன்ற தலைவர் சுப்ரவேல், முன்னோடி விவசாயிகள் தங்கசெல்வராசு, வீரபாண்டி, ஜெயக்குமார் உள்ளிட்ட விவசாயிகள் பலர் உடனிருந்தனர்.

**காவிரி டெல்டா பகுதியில் வல்லத்தில் 33 மி.மீ. மழை பதிவானது**



காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வந்தது. நேற்று காலை முதல் மழை இன்றி காணப்பட்டது. வெயிலின் தாக்கமும் குறைவாக காணப்பட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களில் அதிக பட்சமாக வல்லத்தில் 33 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:– தஞ்சை 8.2, வலங்கைமான் 3.2, நீடாமங்கலம் 0.6, முள்ளியாறு 11.8, திருத்துறைப்பூண்டி 4.2, திருவாரூர் 2.4, நாகப்பட்டினம் 9.7, தலைஞாயிறு 10, நெய்வாசல் தென்பாதி 20.2, மன்னார்குடி 17, வெட்டிக்காடு 6.4, ஒரத்தநாடு 1, பட்டுக்கோட்டை 1, வல்லம் 33, குருங்குளம் 4.